**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்.**
**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ** L.L.M.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருப்பூர்.**

**2025–ம் ஆண்டு ஜுன் மாதம் 24 ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீவிசுவாவசு வருடம், ஆனி திங்கள் 10ம் நாள்**

**இடைக்கால மனு எண். 291/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 342/2020**

1. M.N.சிக்கண்ண செட்டியார் அறக்கட்டளை,
   அதன் பிரதிநிதியாக K.வீரசெந்தில்,
   நிர்வாக அறங்காவலர்

2. திரு.K.வீரசெந்தில் – நிர்வாக அறங்காவலர்
   M.N.சிக்கண்ண செட்டியார் அறக்கட்டளை,

3. திரு.V.சிக்கண்ணன்– அறங்காவலர்,
   M.N.சிக்கண்ண செட்டியார் அறக்கட்டளை,

4. திரு.N.ரவீந்திரன் – அறக்காவலர்
   M.N.சிக்கண்ண செட்டியார் அறக்கட்டளை,

5. திரு.T.சீனிவாசன் –அறங்காவலர்
   M.N.சிக்கண்ண செட்டியார் அறக்கட்டளை

..மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

S.கிரிதரன் ..எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 17.06.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.மகேஷ்குமார் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.V.கிரி அவர்களும் முன்னிலையாகி நிகழ்த்திய

இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

## உத்தரவு

கடந்த 27.03.2025ம் தேதியன்று மனுதாரர்களின் வருகையின்மை காரணமாக அசல் வழக்கை தள்ளுபடி செய்து மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரையை ரத்து செய்யக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 13ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u> :-

**2.1** மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள். எதிர்மனுதாரர்/வாதி, மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்திருந்தார். அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் கடந்த 17.10.2023ம் தேதியன்று மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் பிறகு கடந்த 27.03.2025ம் தேதியன்று ஒருதலைபட்ச தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

**2.2** கடந்த 17.10.2023ம் தேதியன்று 2ம் மனுதாரர் வெளியூரில் இருந்த காரணத்தால் அன்றையதினம் வழக்கறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை. எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கை திரும்ப பெற்றுக்கொள்வதாக மனுதாரருக்கு தெரிவித்திருந்ததால் மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்வதற்கு மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யவில்லை. கடந்த 28.03.2025ம் தேதியன்று அசல் வழக்கில்

பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணை பற்றி எதிர்மனுதாரர்/வாதி தெரிவித்தார். மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தகுந்த எதிர்வாதம் உள்ளதால் மேற்படி ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3. எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :

**3.1** மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று அது சட்டப்படியும், பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. அசல் வழக்கு தாக்கல் செய்து ஐந்து வருடங்களுக்கு பின்னிட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளாக எதிர்மனுதாரரின் பொது செயல்பாடு மற்றும் கடமையை தடுத்துள்ள மனுதாரர்கள், அவர்களின் தனிப்பட்ட காரணத்திற்காகவும் அவர்களது சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகளை தொடர்வதற்காகவும் மீண்டும் வழக்கு விசாரணையை தொடங்குவதற்கு அனுமதி கோருகிறார்கள்.

**3.2** பிரதிவாதிகள் 2021ம் ஆண்டு இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகியும் முதல் மூன்று வருடங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. கடந்த 17.10.2023ம் தேதியன்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் மீண்டும் இரண்டு வருட காலம் அமைதியாக அனைத்து நடவடிக்கைகளையும் கவனித்து விட்டு 2025ம் ஆண்டு இந்நீதிமன்றம் தீர்ப்பாணை பிறப்பித்ததற்கு பிறகு இம்மனுவை தாக்கல் செய்துள்ளதிலிருந்து பிரதிவாதிகளின் கெட்ட எண்ணம் தெரியவருகிறது.

**3.3** மனுதாரர்கள் மனுவில் தகுந்த காரணத்தை குறிப்பிடவில்லை. கடந்த ஐந்து ஆண்டிற்கு பிறகு வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் மேற்படி தீர்ப்பாணையின்படி செயல்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்படலாம். எனவே, இடைக்கால மனுவை இந்நீதிமன்றம் தானாக கோப்பிற்கு எடுத்து தற்காலிக பரிகாரம் வழங்க வேண்டும். சென்னையில் குடியிருக்கும் எதிர்மனுதாரர்/வாதியால் இவ்வழக்கை நடத்த இயலும் என்ற போது நீதிமன்றத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவிற்குள் இருக்கும் பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு இரண்டரை ஆண்டு காலமாக வழக்கறிஞருக்கு விபரம் கொடுக்க இயலவில்லை என்று கூறுவது ஏற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணம் பொய்யானது. எதிர்மனுதாரர் எப்போதும் மனுதாரர்களை பார்த்து பேசியதில்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா என்பதேயாகும்.

**6. <u>தீர்வு</u> :**

**6.1** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், கடந்த 27.03.2025ம் தேதியன்று அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச

தீர்ப்பாணையை ரத்து செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் முன்னிலையான பிறகு, அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள தாவாவை நிராகரிக்க கோரி மனுதாரர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டது என்றும், 22 மாதங்களாக நிலுவையில் இருந்த அம்மனு இறுதியில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேற்படி மனு நிலுவையில் இருந்த காரணத்தினால் தான் 1½ ஆண்டுகளாக அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், எதிர்மனுதாரர், மனுதாரர்களுடன் சமரசம் செய்து வந்ததால் மனுதாரர்கள் தொடர்ந்து வழக்கை நடத்தவில்லை என்றும், அசல் வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பெற்ற பிறகு வாதி அனைவருக்கும் குறுஞ்செய்தி அனுப்பியதன் வாயிலாக மேற்படி தீர்ப்பாணை பற்றிய விபரம் மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்றும், இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரர்களுக்கு பெரும் கஷ்டநஷ்டம் ஏற்படும் என்பதால் மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணம் சரியானதல்ல என்றும், அதனை அவர்கள் நிரூபிக்கவில்லை என்றும், அசல் வழக்கில் பல பிரதிவாதிகள் உள்ள நிலையில் ஒருவர் வெளியூர் சென்றிருந்தால், மற்றொருவர் அறக்கட்டளையை கவனித்திருப்பார் என்றும், மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு சுமார் 1 ½ ஆண்டுகளாக வழக்கு விசாரணையை மட்டும் கவனித்து கொண்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துள்ளார்கள் என்றும், மனுதாரர்கள் கூறுவது போல் எவ்வித சமரச பேச்சும் ஏற்படவில்லை என்றும், உண்மையில் சமரசம் ஏற்பட்டிருந்தால் அசல் வழக்கு திரும்ப பெறப்பட்டிருக்கும் என்றும், ஒருதலைபட்ச தீர்ப்பாணைக்கு பிறகு எதிர்மனுதாரருக்கு பொது சேவை செய்வதற்கும், அவரது கடமையை

அறக்கட்டளை நிர்வாகத்தில் நிறைவேற்றுவதற்கும் ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளபோதும் அதை தடுக்கும் நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இயற்கை கோட்பாட்டு விதிப்படியும், இவ்வழக்கின் பொருண்மைகளை கருத்தில்கொண்டும் அசல் வழக்கில் தீர்வு காணும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவேண்டுமென்றும், பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள காரணங்களை மனுதாரர்கள் நிரூபிக்கவில்லை என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 27.03.2025ம் தேதியன்று அசல் வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

**6.4** கடந்த 17.10.2023ம் தேதியன்று 2ம் மனுதாரர் வெளியூர் சென்றிருந்த காரணத்தால் அவரது வழககறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், ஆகையால் அன்றையதினம் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணத்தை நிரூபிப்பதற்கு எவ்வித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை. மேலும், 2ம்மனுதாரர் வெளியூர் சென்றிருந்த நிலையில், மற்ற மனுதாரர்கள் இந்நீமின்றத்தில் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததற்கான காரணத்தை மனுவில் தெரிவிக்கவில்லை.

**6.5** கடந்த 27.03.2025ம் தேதியன்று ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு சட்ட காலவரையறைக்குள் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணம் நம்பும்படியாகவும், ஏற்கத்தக்கதாகவும் இல்லை. மேலும், எதிர்மனுதாரருடன் ஏற்பட்ட சமாதானத்தால் அசல் வழக்கை மனுதாரர்கள் தொடர்ந்து நடத்தவில்லை என்று கூறியுள்ள காரணம் இயற்கை தன்மையுடன் இல்லை.

**6.6** கடந்த 21.08.1958ம் தேதியிட்ட அறக்கட்டளை பத்திரப்படி 1ம் மனுதாரரான எம்.என்.சிக்கண்ணசெட்டியார் அறக்கட்டளையின் நிர்வாகம் மற்றும் செயல்பாடுகள் குறித்து மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரகள் இடையே பிரச்சனை நிலவுவதால், அசல் வழக்கில் இருதரப்பினரும் அவர்களது தரப்பு வழக்கினை முன்னிலைப்படுத்தி, இருதரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு அசல் வழக்கில் தீர்வு காண்பது இருதரப்பிற்கும் நிரந்தர தீர்வாக இருக்கும் என்று முடிவு செய்து, மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்,** மனுதாரர்கள் திருப்பூர், இலவச சட்டப்பணி ஆணை குழுவிற்கு ரூ.3000/-மும் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையாக ரூ.3000/-மும் மறுவாய்தா தேதிக்குள் செலுத்தவேண்டுமென்ற நிபந்தனையுடன் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

அழைக்க : 24.07.2025

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 24ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.06.24 16:07:02 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.

**<u>மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு  சாட்சிகள்</u>**
**<u>மற்றும் சான்றாவணங்கள் :</u>**   இல்லை

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.06.24 16:07:09 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.